*மு. பெ. சத்தியவேல்முருகனார்*
மின்னஞ்சல் : editor@dheivathamizh.org

தெய்வமுரசு
ஆன்மீக மாத இதழ்

# நவராத்திரியில் பொம்மைகளை அடுக்குவதில் பொருள் உண்டா? பொழுது போக்கா?

சிந்தனைப் பட்டறை சுறுசுறுப்பாயிற்று. ஓர் அன்பர் சிந்தனைப் பட்டறைக்குள் நுழைந்தார். தான் பெரியார் நகரில் இருந்து வருவதாகச் சொன்னார். 'சொல்லுங்கள்'! என்று அவரைத் தூண்டினோம். 'ஒன்றுமில்லை இன்னும் கொஞ்ச நாளில் நவராத்திரி வருகிறது' என்றார். அதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா? என்று கேட்டோம். "ஆசிரியரின் சொற்பொழிவில் அடிக்கடி வழிபாடு அறிவார்ந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்று சொல்வார்".

'சரியாகத் தானே சொல்கிறார்'?

"ரொம்பச் சரி! ஆனால் இந்த நவராத்திரியைத் தான் ஏன் கொண்டாடுகிறார்கள் என்று எனக்கு பல நாளாகப் புரியவில்லை" என்றார். உடன், 'அது ஒரு வழிபாட்டில் சேர்த்தியா என்றே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது' என்றார்.

'ஏன் உங்களுக்கு அந்தச் சந்தேகம்'?

'இல்லை ஒரு பண்டிகை என்றால் எல்லோரும் தானே கொண்டாட வேண்டும்? ஆனால் நவராத்திரியை இந்துக்கள்–மன்னிக்கவும்–சைவர்கள் மற்றும் வைணவர்களாகிய தமிழர்கள் அனைவரும் கொண்டாடுவது இல்லையே! வசதிஇருக்கிறவர்கள் பொம்மைகளை அடுக்கிப்பீற்றிக் கொள்கிறார்கள். அதில் வழிபாட்டு அம்சம் மிகமிகக் குறைவு இன்னும் சொல்லப் போனால் இல்லை என்றே கூட கூறி விடலாம். அலங்கார விளக்குகளும், ஆடம்பரங்களும், அடுக்கி வைக்கப்பட்ட பொம்மைகளும் என ஒரே கூத்துதான்! அதிலும் பெண்கள் பாடுவது, சுண்டல் வாங்கிக் கொண்டு போவது ஒன்றுதான் பிரசித்தம். அதைத் தவிர இப்படிப் பொம்மைகளை அடுக்குவதில் பொருள் உண்டா? இல்லை இது பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட வருடாந்திரப் பொழுது போக்கா?

சிந்தனைப் பட்டறைக்குச் சரியான வேலை கிடைத்து விட்டது என்று மகிழ்ந்தோம். பட்டறை களை கட்டியது.

'அன்பரே! இது மிகப் பெரிய அடிப்படைகளை உடையது. அந்த அடிப்படைப் பீடிகைகளுடன் ஆரம்பிக்கலாமா அல்லது சில வார்த்தைகளில் எடுத்துக் கூறி ஏனையவற்றை உங்களது சிந்தனைக்கே விட்டு விடலாமா?

"எனக்கு வேலை கொடுப்பதானால் இந்தச் சிந்தனைப் பட்டறை எதற்கு"?

'சரி, ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறீர்கள்! இனி என் வேலையை நான்



தொடங்குகிறேன்'.

இந்த உலகில் எல்லோரும் தாங்கள் நினைத்தது நினைத்தபடியே நடந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அப்படி நடப்பதற்கு உரிய உபாயம் என்ன என்று தெரிந்து கொள்வதில்லை. அது தெரிந்தால்தான் இந்த உலகமே நம் கைவசம் வந்துவிடுமே!

சரி, இந்த உலகை நம் வசமாக்கிக்

கொள்ள வேண்டுமானல் இந்த உலகை நாம் நன்கு ஆராய வேண்டும். இப்படிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆராய்ந்த பெரியோர்கள் உலகம் இரண்டிற்குள் அடக்கம் என்று கண்டு பிடித்து விட்டனர்.

அவை எவை தெரியுமா? ஒன்று: காலம்; இன்னொன்று இடம். ஆங்கிலத்தில் டைம் என்றும் ஸ்பேஸ் என்றும் கூறுவார்கள். இன்றைய முன்னேறிய விஞ்ஞானமும் இதை ஒப்புக் கொள்கிறது. ஆம்! இந்த இரண்டிற்குள் பிரபஞ்சமே அடக்கம் என்று அது நிறுவி அதன்மூலம் அண்டவெளிப் பயணத்தை ஆக்கிக் காட்டி இருக்கிறது.

ஆக எந்த ஒரு செய்கையையும் செய்ய வேண்டுமானால் செய்வதற்கு ஒரு களம் அதாவது இடம் வேண்டும்; அந்தச் செய்கையைச் செய்து முடிக்கக் காலம் வேண்டும். ஆகவே இடமும், காலமும் இரண்டும் அடிப்படைப் பொருட்கள். இவையின்றி எந்த இயக்கமும் இல்லை.

இந்த இரண்டில் இடம் என்பது நமது கண்ணுக்குப் புலனாகிறது. காலம்? இது கண்ணுக்குப் புலனாவதில்லை. ஆனால் இதன் இருப்பை நாம் உணர்கிறோம். உதாரணத்திற்கு அரிசியைச் சோறாக்குவது ஒரு செய்கை. அதற்கு ஓர் இடம் வேண்டும். அடுப்பு வேண்டும். அடுப்பும் இடத்தின் ஒரு பகுதியே. ஆனால் அடுப்பில் உலையை வைத்தவுடன் சோறாகிவிடுவதில்லை. நீங்கள் எவ்வளவு அவசரப்பட்டாலும் சரி! உலை வெந்து சோறாவதற்கு சிறிது காலம் பிடிக்கிறது. அது கற்றுக் குட்டிப் பெண்களுக்கு என்று குக்கரில் விசில் சத்தம் உதவுகிறது. மூன்று விசில் வந்தால் சோறு வெந்து பக்குவமாகி விட்டது என்று அவள் இறக்கி வைக்கிறாள். ஆனாலும் உலையில் அரிசி போட்டவுடனே விசில் சத்தமிடுவதில்லை. அதற்குக் காலம் பிடிக்கிறது. அதற்காகக் காத்திருக்கும் போது தான் காலம் என்று ஒன்று இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம்.

ஆகவே கண்ணுக்குப் புலனாகும் இடமும், கண்ணுக்குப் புலனாகாத காலமும் ஆகிய இரண்டும் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை.

இதில் எந்தச் செய்கைக்கு எந்த இடம் உகந்தது? என்று சரியாகக் கண்டுபிடித்து அதைத் தேர்ந்தெடுத்து செய்வோமானால் உலகமே நம்வசம் என்கிறார் வள்ளுவர்.

“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்”

காபிக் கொட்டைச் செடியை சமதளப்பரப்பில் வளர்க்க முடியாது. அது குளிர்ப்பிரதேசத்தில், கொடைக்கானல் ஊட்டி போன்ற மலைப் பாங்கான இடங்களில் மிக உயரத்தில் கொடு முடிகளில் தான் இயல்பாக வளரும். அது போன்ற இடங்களில் மட்டுமே வளர்ந்து பூக்கக் கூடிய குறிஞ்சி மலர் கூட எல்லாக் காலத்திலும் பூப்பதில்லை. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதான் பூக்கிறது. இவற்றை ஆராய்ந்து காலமும், இடமும் கருதிச் செற்தால் காபிக் கொட்டை கணக்கிறந்த மகசூல் தரும். குறிஞ்சிப்பூ கூடை கூடையாய் பூத்து கொள்முதலாகும்.

வேறு ஒரு உதாரணத்தில் இதை உணரலாம். தண்ணீர்ப் பந்தல் வைத்து வழிப் போக்கர்களுக்கு தாகம் தீர்ப்பது புண்ணியம்தான். ஆனால் தண்ணீர்ப் பந்தல் எப்போது தேவைப்படும்? மாரிக் காலத்தில் கொட்டும் மழையில் தண்ணீர்ப் பந்தல் எதற்கு? எவன் அதைச் சீந்துவான்? கோடைக் காலத்தில்தான் தண்ணீர்ப் பந்தல் தேவை என்பது தெளிவு. அப்போது கூட தண்ணீர்ப் பந்தலை எங்கே வைப்பது என்று தெரிந்து வைத்தால் தானே புண்ணியம்? “அன்பரே! அதோ அந்த மலை உச்சி இருக்கிறது பாருங்கள்! அங்கே வெட்டிவேர் நன்னாரி எல்லாம் போட்டு குளிர்ந்த பானையில் தண்ணீர் வைத்திருக்கிறேன். அங்கே வந்து தண்ணீர் குடித்து தாகம் தீர்த்துக் கொண்டு மேலே செல்லலாம்” என்றால் எவன் மலையுச்சிக்குப் போய் தண்ணீர் அருந்த விரும்புவான்?

ஆகவே எதற்கும் உரிய, உகந்த காலமும், இடமும் உண்டு. இதை ஆராய்ந்து தேர்ந்தேடுக்க வேண்டும். இதைத்தான் வள்ளுவர் கருதி என்ற சொல்லால் மேற்சொன்ன குறளில் குறிப்பிட்டாார். இவ்வாறு உரிய முறையில் கருதி ஆராய்ந்து செயலை மேற்சொன்ன குறளில் குறிப்பிட்டார். இவ்வாறு உரிய முறையில் கருதி ஆராய்ந்து செயலை மேற்கொண்டால் என்ன ஆகும்? நீ நினைத்தபடி உலகமே ஆனாலும் அது கைவசப்படும் என்றார் வள்ளுவர்.

இந்தக் காலத்திற்கும் இடத்திற்கு

அதிபதிகள் உண்டு. காரணம் அவை இயங்குகின்றன. அதே சமயம் அவை சடமாக இருக்கின்றன. சடப் பொருள்கள் தாமாக இயங்கா. எனவே இவற்றை இயக்குபவன் ஒருவன் வேண்டும் அவனைத்தான் இயவுள், கடவுள், என்கிறோம். இயக்குவதால் கடவுளுக்கு இயவுள் என்று பெயர்.

காலம், இடம் ஆகிய இரண்டும் எல்லையற்று விரிந்து பரந்தவை. அவற்றைக் கூறு கூறாக ஆக்கினால் அவை பெரும் பொழுது சிறு பொழுது எனப் பலவாகப் பிரியும். இடமும் பிரபஞ்சத்திலிருந்து நாம் உட்காருகிற இடம்வரைப் பலவாகப் பிரியும். எல்லையற்ற இவற்றின் தொகுதிக்கு எல்லையற்ற பரம்பொருளே தலைவன்.

ஒரு நாட்டின் அதிபர் அந்த நாட்டின் எல்லாச் செயல்களுக்கும் பொறுப்புடையவர். ஆனால் எல்லாச் செய்கையையும் அவரே செய்யமாட்டார். அதுபோல எல்லையற்ற பரம்பொருள் எல்லையற்ற காலத்தையும், எல்லையற்ற இடத்தையும் பெருங்கூறு அதன் உட்கூறு என்று கூறு கூறாகப் பிரித்து அவ்வவற்றில் அதிதேவதைகளை அமர்த்தி இயக்கி வருகிறான்.

காலத்தின் பெருங்கூறும், சிறுகூறும் பற்றி ஒரு கருத்துக் காட்சியைக் காண வேண்டுமானால் அதைப் பார்ப்போம். காலத்தின் மிகச் சிறிய கூறு கணம். கணம் என்பது 16 தாமரை இலைகளை அடுக்கி ஓர் ஊசியை மேலிருந்து சொருகினால் அது அவற்றின் ஊடாய்ச் சென்று அடியை அடைவதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ அது கணம் எனப்படும். ஒரு கணம் என்பதை ஒரு நொடி என்றும் கூறலாம்.

கணம் பல சேர்ந்தது வினாடி. 60 வினாடி ஒரு மணி. 12 மணி நேரம் 1 பகல்; 12 மணி நேரம்– 1 இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள். 365–1/4 நாள் சேர்ந்தது ஓர் ஆண்டு. 43,20,000 ஆண்டுகள் சேர்ந்தது ஒரு சதுர்யுகம். 71 சதுர்யுகம் ஒரு மன்வந்திரம். 1000 சதுர்யுகம் சேர்ந்தது ஒரு கற்பம். 2 கற்பம் சேர்ந்தது ஒரு பிரம்ம தினம். 360 பிரம்ம தினம் ஒரு தேவயாண்டு. 50 தேவயாண்டு ஒரு பரார்த்தம். இரண்டு பரார்த்தம் பிரம்மனின் வாழ்நாள்.

இதையெல்லாம் கேட்டால் தலை சுற்றுகிறது அல்லவா? இந்தக் கணக்கை எல்லாம் விடுங்கள்! காலத்தில் இப்படிப் பல கூறுகள் உண்டு என்பதை மட்டும் நினைவில் வையுங்கள்.

இடமும் இப்படித்தான் பல கூறுகள் உடையது. நம் இடம்; நம் வீடு; நம் தெரு; நம் ஊர்; நம் வட்டம்; நம் மாவட்டம்; நம் மாநிலம்; நம் நாடு; நம் கண்டம்; நம் உலகம்; நம் கோள்; நம் சூரியன்; நம் நட்சத்திரம்; நம் பிரபஞ்சம் என்று பலவாறு சிறியதிலிருந்து பெரிதாக விரிகிறது.

ஒவ்வொரு காலக் கூற்றிக்கும், இடக்கூற்றிற்கும் அதி தேவதைகள் உண்டு, அவர்களைக் கொண்டு ஆண்டவன் அவற்றை இயக்குகிறான்.

அங்கே ஊழியர் சங்கம்; அதிகாரிகள் சங்கம் என்றெல்லாம் கிடையாது. எல்லோரும் ஆண்டவனின் அன்பான அரவணைப்பில் அன்பான ஆணையை ஏற்று ஒழுங்காக இயங்கி வருகிறார்கள். அதனால் தான் பிரபஞ்சம் நியதியாக இயங்கி வருகிறது.

ஆக, இந்தக் காலக் கூறுகளை எல்லாம் அறிந்து, இடக் கூறுகளை எல்லாம் அறிந்து எந்தெந்தக் காலத்தில் என்பதை அருளாளர்கள் கண்டறிந்து வகுத்ததுகான் நமது பண்டிகைகள். அந்தப் பண்டிகையில் ஒன்றுதான் அந்த நவராத்திரி.

நவராத்திரி ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் வரு மாளய அமாவாசையில் தொடங்கும். மகா பிரளயம் என்பதுதான் மாளயம் என்று திரிந்து வந்து விட்டது. மகாப்பிரளயம் என்பது எல்லாம் முற்றிலுமாக ஒடுங்கியது எள்று பொருள். அமாவாசை என்பது இரவு நிலவில்லாது உலகம் முழுக்க இருளால் சூழப்பட்டது என்பதை நாமறிவோம். மகாபிரளய அமாவாசை என்றால் உலகம் எல்லாம் ஒடுங்கி முற்றிலுமாக இருள் சூழ்ந்த நிலை என்பது அதன் பொருள். நவராத்திரியை இந்த இருட்டில் ஏன் தொடங்க வேண்டும்? இதையும் அருளாளர்கள் ஓர் அறிவார்ந்த அடிப்படையில்தான் அமைத்தார்கள். அதை என்ன என்று பார்ப்போம்.

ஒரு காலத்தில் ஆண்டு இப்போது சித்திரையில் தொடங்குவது போல தொடங்குவதாக தமிழர்கள் அமைத்துக் கொள்ளவில்லை. சூரியன் அதன் ஆட்சி வீடான சிம்மராசி எனப்படும் வானிலை அமைப்பில் இருக்கும் காலமான ஆவணியில் இருந்து ஆண்டு தொடங்கியதாகக் கொண்டார்கள்.

அதன் பின்னால் காலம் மாற மாற சிந்தனைகள் மாறின. சிந்தனைகள் மாறினால் தானே வளர்ச்சி காண முடியும்? சூரியனது வெப்பம் வானில் சூரியன் எந்த கோள் நிலையில் இருக்கும்போது அதிகமாக இருக்கிறது என்று ஆராய்ந்தார்கள். சித்திரை மாதத்தில் மேஷ ராசி என்னும் வானிடத்தில் இருக்கும்போதுதான் உச்ச வெப்பம் நிகழ்கிறது என்பதை உறுதி செய்தார்கள். அந்த உச்சத்தைத் தொடக்கமாக வைத்துக் கொள்வது என்று ஆரம்பித்தார்கள். அதனால் ஆண்டு சித்திரையில் தொடங்குவதாக அமைத்துக் கொண்டார்கள்.

அதன் பின்னர் ஒவ்வொரு மாதத்திற்கும் அந்தந்த மாதத்தில் நிகழ்கிற நிறைநிலா எந்த நட்சத்திரத்தில் நிகழ்கிறதோ அந்தந்த நட்சத்திரப் பெயரை அந்தந்த மாதத்திற்கு வைத்தார்கள்.

| **நிறைநிலா நிகழும் நட்சத்திரம்** | **மாதப் பெயர்** |
|---|---|
| **சித்திரை** | **சித்திரை** |
| **விசாகம்** | **வைகாசி** |
| **மூலம்** | **ஆனி** |
| **உத்திராடம்** | **ஆடி** |
| **அவிட்டம்** | **ஆவணி** |
| **பூரட்டாதி** | **புரட்டாசி** |
| **அசுவனி** | **ஐப்பசி** |
| **கிருத்திகை** | **கார்த்திகை** |
| **மிருக சீரிஷம்** | **மார்கழி** |
| **பூசம்** | **தை** |
| **மகம்** | **மாசி** |
| **உத்திரம்** | **பங்குனி** |

மதியாகிய நிறைநிலாவின் பெயரைத் தாங்குவதால் அதற்கு மாதம் என்று பெயர். அல்லது திங்களால் பெயரைத் தாங்குவதால் மாதத்திற்குத் திங்கள் என்றும் பெயர் வைத்தார்கள்.

இந்த பன்னிரண்டு மாதங்களில் சூரியன் பூமியின் மீது நேரடியாகக் கதிர்களை வீசும் காலம் ஆறு மாத காலம் என்றால், சூரியன் மறைந்த வட்டப் பாதையில் நின்று கதிர் வீசும் காலம் ஆறு மாதம். நேரடியாகக் கதிரவன் கதிர் வீசும் காலத்தில் பகல் காலம் அதிகமாக இருக்கும். மறைவட்டப் பாதையில் இருந்து கதிரவன் கதிர்களை வீசும் ஆறுமாத காலத்தில் இரவுக் காலம் அதிகமாக இருக்கும். வருடத்தில் இரண்டு நாட்கள்தான் பகல் காலமும் இரவுக் காலமும் சமமாக இருக்கும். ஒன்று அது ஆங்கில ஆண்டின் மார்ச் மாதத்திலும் மற்றொன்று மற்றொன்று ஆங்கில ஆண்டின் செப்டம்பர் மாதத்திலும் அமையும்.

இவ்வாறு பகல் காலங்கள் அதிகமான ஆறு மாதங்கள், தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆகியவை. இக்காலத்தை உத்தராயணம் என்பார்கள்.

இவ்வாறு இரவுக் காலங்கள் அதிகமான ஆறு மாதங்கள் ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகியவை. இக்காலத்தைத் தட்சிணாயனம் என்பார்கள்.

எனவே ஒரு நாளில் இரவுக்காலம், பகல் காலம் என்று கூறு படுத்துவது போல ஓர் ஆண்டில் அதிகமாகவே இரவுக் காலங்கள் உடைய ஆறுமாதக் காலத்தை அதாவது தட்சிணாயனத்தை ஆண்டிரவு என்றும், அதிகமான பகல் காலங்களை உடைய ஆறுமாதக் காலத்தை அதாவது உத்தாராயணத்தை ஆண்டுப் பகல் என்றும் வைத்தார்கள். ஆண்டிரவு, ஆண்டுப் பகல் என்பதை சிறுபிள்ளைகளுக்கு நாட்பகல், நாளிரவு என்பவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்ட தேவ இரவு, தேவப் பகல் என்று பெயர் வைத்துக் கூறினார்கள்.

அப்படியானால் ஒவ்வொரு நாளின் மணிக் கூறுகளும் தேவப் பகல், தேவ இரவில் எந்தெந்தக் கூறாக அமையும் என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

| மாதம் | பொழுது | மணிமுதல் | மணி வரை |
|---|---|---|---|
| **முன் பனிக்காலம்** | | | |
| மார்கழி | வைகறை 4–00 | காலை | 6–00 |
| தை | காலை 6–00 | காலை | 8–00 |
| **பின் பனிக்காலம்** | | | |
| மாசி | காலை 8–00 | காலை | 10–00 |
| பங்குனி | காலை 10–00 | பகல் | 12–00 |
| **வேனில் காலம்** | | | |
| சித்திரை | பகல் 12–00 | பிற்பகல் | 2–00 |
| வைகாசி | பிற்பகல் 2–00 | மாலை | 4–00 |
| **முதுவேனில் காலம்** | | | |
| ஆனி | மாலை 4–00 | மாலை | 6–00 |
| ஆடி | மாலை 6–00 | இரவு | 8–00 |
| **கார் காலம்** | | | |

ஆவணி இரவு 8-00 இரவு 10-00

புரட்டாசி இரவு 10-00இரவு 12-00

**கூதிர் காலம்**

ஐப்பசி இரவு 12-00 பின் இரவு 2-00

கார்த்திகைபின்இரவு2-00வைகறை 4-00

இந்தப் பகுப்பின்படி பார்த்தால் புரட்டாசி மாதம் இரவு 10-00 மணியிலிருந்து அடர்த்து வரும் இரவாகி நள்ளிரவு 12.00 மணிவரை உள்ள ஆண்டுக் காலம்.

இந்தக்காலம் எல்லாம் ஒடுங்கி நிற்கிற காலம். அதனால் தான் வரும் அமாவாசையை எல்லாம் ஒடுங்கும் மகாபிரளயம் என்பதற்கு ஒப்பிட்டார்கள். அவ்வாறு ஒப்பிட்டு புரட்டாசி மகாபிரளய அமாவாசையை எல்லாம் ஒடுங்கியலய நிலைக்கு ஒப்பாக்கினார்கள்.

இறைவன் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிய நிலைதான் லயநிலை. அதன் பின்னர் பக்குவமடையாத உயிரினங்கள் மீண்டும் பிறந்து பக்குவமுற மீண்டும் உலகைப் படைக்கிறான். அந்தப் படைப்பிற்கு தன் உள்ளே ஒடுக்கிய ஆற்றலை, சக்தியை விரிக்கிறான். அந்தச் சக்தி மெல்ல மெல்ல விரிந்து உலகனைத்தையும் படைக்கிறது.

அந்தப் படைப்பு முறையை இப்போது பார்ப்போம். சத்தியும் இறைவனிடம் ஒடுங்கிய நிலை லய நிலை என்கிறோம். பிறகு உலகு படைக்கப்பட வேண்டும் என்று இறைவன் எண்ணும்போது சத்தி இறைவனிடமிருந்து பிரியாமல் தோன்றி நிற்கும்போது அது பராசத்தி எனப்படும்.

இந்தப் பராசத்தியின் ஆற்றல் எல்லையற்ற ஆற்றலாக இருக்கும்: அப்படியே உயிர்களோடு பராசத்தி தொடர்பு கொள்ள முடியாது. காரணம் உயிர்கள் அந்த எல்லையற்ற ஆற்றலைத் தாங்க மாட்டா.

மழை வேண்டும் தான்! ஆனால் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்படி மழை பெய்தால் பயிர்கள் என்ன ஆகும்! மொத்தம் நாசமாகி விடும் அல்லவா? அது போலத் தான் பராசத்தியின் எல்லையற்ற ஆற்றலும். அத்தனைஆற்றலோடு தொடர்பு கொண்டால் வெள்ளத்தில் பயிர்கள் நாசமாகி விடுவதைப்போல இங்கே உயிர்கள் நிலை குலைந்து போகும். எனவே ஆற்றலை உயிர்கள் தாங்கும் அளவிற்கு பராசத்தி ஆற்றலை மெல்ல மெல்லக் குறைத்து குறைத்து உயிர்களோடு தொடர்பு கொள்கிறாள்.

ஒரு குழந்தை! அதுவும் அது பச்சிளம் குழந்தை. அது பால் உட்கொண்டால் தான் உயிர் வாழும். தாய் பால் ஊட்ட வேண்டும். ஆனால் அவளுக்கோ பால் வற்றி விட்டது. ஆவின் பாலை ஊட்டுகிறாள். காரணம், அவளது கணவர் ஆவின் பால் அதிகாரி. அந்த அதிகாரி செல்வாக்கினால் ஆவின் பால் டேங்கர் லாரியை வீட்டுக்குக் கொண்டு வந்து விடுகிறார். அது அவரால் முடியும். அவருக்குத் தான் செல்வாக்கு உண்டே!

டேங்கர் லாரியில் பால் 20,000 லிட்டர் ததும்பிக் கொண்டிருக்கிறது. அதை வெளியேற்ற பெரிய பைப் ஒன்று அந்த டேங்கர் லாரியிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்த லாரி அவர் வீட்டின் வாசலில் வந்து நின்றது.

அதிகாரி மனைவியைக் கூப்பிட்டார்! ‘இந்தா! குழந்தையைக் கொண்டு வா!’ அந்த அம்மையார் கொண்டு வந்தார். டேங்கர் லாரியின் பெரிய பைப்பை எடுத்து அதன் வாயின் கிளிப்பை நீக்கி அப்படியே அதைக் குழந்தை வாயில் வைத்தார்! என்ன ஆகும்? பீச்சி வரும் பாலில் குழந்தை தேறுமா? அதற்கு ஒரேயடியாக பால் ஊற்றி விட வேண்டியதுதான்! இல்லையா!

அதிகாரி என்ன செய்ய வேண்டும்? பைப்பில் பாலை பெரிய அடுக்கு ஒன்றில் வாங்கி அதை ஒரு பாட்டிலில் ஊற்றி, அந்தப் பாட்டில் வாய்கூட பெரிதாகையால் அதில் ஒரு ரப்பர் சூப்பானைப் பொருத்தி, அந்த ரப்பர் சூப்பானில் ஒரு மெல்லிய ஊசித் துளையிட்டு அதை வாயில் வைத்தால் குழந்தை பாலும் அருந்தும்; பிழைக்கவும் செய்யும். அதை விட்டு பைப்பில் பாலை பீச்சினால் குழந்தை என்ன ஆவது?

இது நமக்கே தெரியுமானால் இறைவனுக்குத் தெரியாதா என்ன? எனவே இறைவன் தன் ஆற்றலை பராசத்தியாக வெளிப்படுத்தி உயிர்களை அப்படியே தொடர்பு கொண்டால் அவை தாங்கமாட்டா என்று தனது ஆற்றலை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்கிறான். அந்த முறைமை எப்படி என்று பார்பபோம்.

பராசத்தி தனது ஆற்றலில் ஆயிரத்தில்

ஒரு பங்காகக் குறைத்து வெளிப்படுகிறாள். அதற்கு ஆதிசத்தி என்று பெயர். இதையே மனோன்மனி என்றும் கூறுவர். இந்த ஆற்றலும் உயிர் தாங்காது என்று மேலும் ஆயிரத்தில் ஒரு பங்காக ஆற்றலைக் குறைத்துக் கொற்கிறாள். அப்போது அவளுக்கு ஞானசத்தி என்று பெயர். அதுவும் உயிர் தாங்காது என்று அதிலும் ஆயிரத்தில் ஒரு கூறாகக் குறைத்து வெளிப்படுகிறாள். அதற்கு கிரியா சத்தி என்று பெயர். அதிலும் ஆயிரத்தில் ஒரு கூறு வெளிப்படுகிறது. அதற்கு இச்சா சத்தி என்று பெயர். அதிலும் ஆயிரத்தில் ஒரு கூறு வெளிப்படுகிறது. அதற்கு குடிலா சத்தி என்று பெயர்.

இச்சா சத்தியிலிருந்து ஆயிரத்தில் ஒரு கூறாக வெளிப்பட்ட குடிலா சத்திகள் மொத்தம் ஏழு. அதாவது இச்சா சத்தியில் இருந்து ஏழு குடிலா சக்திகள் ஒவ்வொன்றும் ஆயிரத்தில் ஒன்றாய் பிரிகின்றன. அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர். அவற்றை வரிசையாகப் பார்ப்போம்.

1. பலப்பிரமதனி
2. பலவிகரணி
3. கலவிகரணி
4. காளி
5. ரௌத்திரி
6. சேட்டை
7. வாமை

இந்த ஏழும் சட உலகின் ஒவ்வொரு கூற்றை உருவாக்கி இயக்குகின்றன. எது எது எதை எதை இயக்குகிறது தெரியுமா?

1. பலப்பிரமதனி – சூரியனை உருவாக்கி இயக்குகிற சத்தி.

2. பலவிகரணி – சந்திரனை உருவாக்கி இயக்குகிற சத்தி.

3. கலவிகரணி – ஆகாயத்தை உருவாக்கி இயக்குகிற சத்தி.

4. காளி – வாயுவை உருவாக்கி இயக்குகிற சத்தி.

5. ரௌத்திரி – தீயை உருவாக்கி இயக்குகிற சத்தி.

6. சேட்டை – நீரை உருவாக்கி இயக்குகிற சத்தி.

7. வாமை – நிலத்தை உருவாக்கி இயக்குகிற சத்தி

இப்போது முதலில் பிரிந்து வந்த ஏனைய சத்திகள் எதை எதை இயக்குற சத்திகள் என்று பார்ப்போம்.

பராசத்தியிடமிருந்து பிரிந்து வந்த மனோன்மனி உயிர்களையும் இறைவனையும் தொடர்புபடுத்துகிற அருட்சத்தி, மனோன்மனியிடமிருந்து பிரிந்து வந்த ஞானசத்தி, கிரியா சத்தி, இச்சா சத்தி, ஆகிய மூன்றும் உயிர்களை இயக்குகின்ற சத்தி. ஆகவே மூன்றையும் ஒன்றாக்கி அதை சர்வபூததமனி என்பார்கள் பெரியோர். இதுவே செயற்பாட்டில் திரசோதான சத்தி என்றும் கூறப்படும்.

ஆக குடிலா சத்திகள் ஏழும், சர்வபூததமனி சத்தி, மனோன்மனி சத்தி ஆகிய இரண்டும் சேர்ந்து மொத்தம் இறைவனது லய நிலையிலிருந்து பிரிந்து நின்று உயிரையும், உலகையும் இயக்கும் சத்திகள் ஒன்பது. அதாவது பகலொளிப் பொருள், இரவொளிப் பொருள் ஆகிய சூரிய சந்திரரும், மற்றும் ஐம்பூதங்களும் கொண்ட உலகை உருவாக்கி இயக்குகிற குடிலாசத்திகள் ஏழும், உயிர்களை இயக்குகின்ற சர்வபூததமனி ஒன்று, உடன் பக்குவம் பெற்ற உயிர்களையும், இறைவனையும் தொடர்புபடுத்தி விடுகிற சத்தியாகிய மனோன்மனி சத்தி ஒன்றுமாக மொத்தம் சத்திகள் ஒன்பது.

இந்த ஒன்பது சத்திகளும் லய நிலையாகிய மகாபிரளய இருளிலிருந்து பிரிந்து வந்து உலகை உருவாக்கி உயிர்களைப் பக்குவப் படுத்துவதைக் கொண்டாடுவதுதான் நவாத்திரி.

குடிலா சத்திகளாகிய ஏழும் தம்முள் கூடியும் குறைந்தும் உலகில் உருவாக்கும் இயற்கைப் பொருள்களோ பலப்பல, பலவேறு விதமான வடிவங்கள்; பலவேறு விதமான வண்ணங்கள்; பலவேறு விதமான திறப்பாடுகள்; பலவேறு விதமான செயற்பாடுகள். இதை எல்லாம் குறிக்கவே பலவேறு விதமான பொம்மைகளை அடுக்கி வைத்து நவராத்திரியைக் கொண்டாடினார்கள். இறைச் சத்தியே! இயற்கைச் சத்தியே! உன் படைப்பில்தான் எத்தனை கோடி வடிவங்கள்!! இப்படி அந்தச் சத்தியை வியந்து லய

நிலையிலிருந்து அது உலகைப் படைத்ததைப் படைத்தவாறு காட்டிப் போற்றிப் பரவுவதே நவராத்திரி.

இதில் முதல் ஏழு நாட்கள் குடிலா சத்திகள் ஏழிற்கு உரியன. அடுத்து உயிர்களை அந்த சத்தி அதாவது சர்வபூததமனி இயக்கி அவற்றின் அறிவைத் துலக்குவதால் அதை சரஸ்வதி பூசையாக் கொண்டாடினார்கள். அடுத்து பக்குவப்பட்ட உயிர்களை மனோன்மனி சத்தி இறைவனிடம் தொடர்பு படுத்தி முத்திச் செல்வத்தை வழங்குவதால் அந்த நாளை திருமகள் வழிபாட்டு நாளாக விஜயதசமி என்று கொண்டாடினார்கள்.

மேலே ஆதிசத்தி, பராசத்தியில் இருந்து பிரிந்த சத்தி என்றோம். அந்த ஆதிசத்திக்கு மனோன்மனி என்று பெயர் என்றோம். இதை எல்லாம் கீழே வருகிற திருமந்திரப்பாடல் உறுதி செய்கிறது.

**ஆதி அனாதியும் ஆய பராசத்தி**
**பாதி பராபரை மேலுறை பைந்தொடி**
**மாது சமாதி மனோன்மனி மங்கலி**
**ஓதும் என் உள்ளத் துடன் முகிழ்த்தாளே!**

ஆதி அனாதியும் ஆய பராசத்தி என்ற வரியால் அனாதியான பராசத்தி ஆதிசத்தியாக ஆயினாள் என்றார். பராசத்தி என்பது இறைவனது லய நிலையில் அவனுடன் ஒடுங்கி நின்ற நிலையில் இருந்து பாதியாக சமமாகப் பிரிந்து நின்றவள் என்பதைக் கூற பாதி பராபரை என்றார்.

இறைவனோடு உயிர்கள் சமாதியடைவில் பொருத்துபவள் மனோன்மனி ஆதலால் மாது, சமாதி மனோன்மனி என்றும் அவளே முத்தியாகிய மங்கலம் பெறக் காரணமாதலால் மங்கலி என்றும் கூறினார்.

இந்த சத்தி மூவுருவமும் ஓருருவாகக் கொண்டவள் என்பதைக் கீழ்வரும் திருமந்திரப் பாடலில் உறுதி செய்கிறார்திருமூலர்:

**திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்**
**பரிபுரை நாரணியாய் பல வன்னத்தி**
**இருள்புரை ஈசி மனோன்மனி என்ன**
**உருபலவாய் நிற்கும் மாமாது தானே!**

அந்தப் பராசத்தி மூவுருவமும் ஒருருவமாக் கொண்டவள் என்பதால் அவள் திரிபுரை சுந்தரி. அவளே சுந்தரி. அதாவது அந்த மூவுருவத்தையும் நீங்கி வேறாய்நிற்க வல்லவள்; எனவே சுந்தரி. அவள் சிந்துரப் பரிபுரையாய் சரஸ்வதியாய் நிற்பாள்: நாரணியாய் திருமகளாய் நிற்பாள்; ஈசன் மனைவி ஈசி என்ற நிலையில் கருநிறத்தவளாய் நிற்பாள். இப்படி உரு பலவாய் வருபவள் அவள் ஒருத்தியே! எனவே அவள் மாமாது தானே! என்றார்.

இத்தனை பொருள் பொதிந்த ஒரு பண்டிகைக் கொண்டாட்டத்தை வெறும் பொம்மைகளின் இடுக்கு என்று எண்ணுவதும், அப்படிச் செயல்படுவதும் அறியாமையின் உச்சகட்டம் எனலாம்.

வெறும் பொம்மைகளை மட்டும் நவராத்திரி கொலு என்ற வைப்பவர்கள் மிகப் பெரிய கருத்தூட்டமான ஒன்றைக் கொச்சைப்படுத்துபவர்கள் ஆவார்கள்.

கொலுப் பொம்மைகளின் இடையே நடு நாயகமாக ஒன்பது கலசங்களை அமைக்க வேண்டும். ஒன்பது சத்திகளில் ஆதி சத்தியாகிய மனோன்மனி சத்தியை நடு நாயகமாக அமைக்க வேண்டும்.

இந்தக் கலசங்களைச் சுற்றித்தான் பொம்மைகளை அவரவர் வசதி, விருப்பத்திற்கேற்ப அடுக்க வேண்டும். தினந்தோறும் மாலையில் அந்தக் கலசங்களுக்கு உரிய முறையில் பூசை செய்தல் வேண்டும். அந்தப் பூசை முடிவில்தான் பெண்கள் பாடுதல் வேண்டும். அதுவன்றி எந்தப் பூசையும் செய்யாமல் பாடுவது வறிதே கச்சேரி ஆகிவிடும். அதில் எந்தப் புனிதமும் கிடையாது: பொற்பும் கிடையாது.


ஒன்பது நாளும் பூசை நடத்த வசதிப்படாதவர்கள் குறைந்த அளவில் சரஸ்வதி பூசை ஒன்றிலாவது மேற்கூறிய அனைத்தையும் பாவனையாகச் செய்து வழிபடலாம்.

பூசைக்குரிய பாடல்கள்:

1. திருமந்தி –4ம் தந்திரம்– திரிபுரைப் பகுதி
2. சரஸ்வதி வழிபாடு – சகலகலாவல்லி மாலை
3. விஜயதசமி வழிபாடு – திருமகள் போற்றி 108

நவராத்திரி நற்பொருளை உணர்ந்து உரிய வழிபாடுகளைச் செய்து நவநிதியமும் பெறுக! நல்லருளைக் கூடுக!

# நவராத்திரி (சிறப்பு தத்துவ) வழிபாடு




*1−7 குடிலாசத்தி*
*1. பலப்பிரமதமனி*
*2. பலவிகரணி*
*3. கலவிகரணி*
*4. காளி*
*5. ரௌத்திரி*
*6. சேட்டை*
*7. வாமை*

***அ. மனோன்மனி (ஆதிசத்தி)***
***ஆ. சர்வபூததமனி (திரோதான சத்தி)***

மகாலய அமாவாசையன்று கொலு வைக்க வேண்டிய ஏற்பாடுகளை மேற்கண்ட படத்தை ஒட்டி அமைத்துக் கொள்ளலாம். 9 சத்திகளுக்கு 9 கலசங்கள் / 9 மஞ்சள் கூம்புகளை பிடித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். மனோன்மணி கலசத்தை பெரிதாகவும், சர்வ பூததமனியை சற்று சிறிதாகவும் 7சுற்று கலசங்களை சிறிதாக அமைத்துக் கொள்ளவும். இவற்றை நடு நாயகமாக நிறுவுக. அமாவாசைக்கு அடுத்த நாளிலிருந்து தொடர்ந்து 7 நாட்கள் உலகப் பொருள் தோற்றத்திற்கு உதவும் 7 சத்திகள் எழுந்தருளச் செய்து பூசைகள் ஆற்றுக. இதைத் தொடர்ந்து 8ஆம் நாள் உயிர்களுக்கு அறிவைத் துலக்கும் சரசுவதியை எழுந்தருளச் செய்து முதல் 7 கலசத்துடன் 8ஆவது கலசத்திற்கு நன்றியுடன் பூசையை ஆற்றுக. நிறைவாக 9ஆம் நாள் மனோன்மணித்தாயை நடு நாயகமான கலசத்தில் எழுந்தருளச் செய்து உயிர்களுக்கு முத்திப் பேற்றை நல்கும் திருமகள் வழிபாட்டை மேற்கொள்க. இப்பொழுது நவராத்திரி வழிபாட்டை அமாவாசைக்கு அடுத்த(பிரதமை) நாளிலிருந்து தொடர்ந்து செய்க.

**1.0.** முதலில் குளித்துவிட்டு தூய்மையாக பூசை செய்யும் இடத்திற்கு வரவேண்டும். குளிக்குமுன் தூய்மையான நீரை உரிய வாளியில் அல்லது பாத்திரத்தில் நிரப்பிக் கொள்க. அதில் ‘ஓம்’ என்று எழுதி உள்ளங்கையால் மூடி (இதற்கு பதாகை முத்திரை என்று பெயர்) ஏழுமுறை ஓங்காரத்தை ஓதுக. பின்னர் வழக்கப்படி குளிக்க. பின்னர் இறுதியாக குவளையில் நீரை முகந்து அதனை உள்ளங்கையால் மூடி வரும் பாடலைப் பாடுக:

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி

சோதித் திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

பின்னர் குவளை நீரை தலைமேல் ஊற்றிக் குளிக்க. இவ்வாறு பாடி இறையுணர்வோடு தலைமேல் ஊற்றிக் கொள்கிற நீர் அருள் வீழ்ச்சியாக (சத்திநிபாதம்) மாறி நம் உடலைப் பேதித்து அதாவது மாற்றி பூசை செய்வதற்குத் தகுதியாகும் தன்மையைக் கொடுக்கும். இதை சிறப்பு நாளன்றி நாடோறும் கூட கடைப்பிடிக்கலாம். சிறப்பு நாளில் நிச்சயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**1.1.0.** இனி, பூசை செய்யுமிடத்திற்கு வந்து தமிழ்மறை சைவ அனுட்டானத்தைச் சிவதீக்கை பெற்று நாடோறும் செய்கிறவர்கள் அதைச் செய்து கொள்க. அல்லாதவர்கள் வரும் முறைகளைக் கடைப்பிடிக்க.

**1.1.1.** ஒரு பூவை எடுத்து இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவ நடு, உச்சித்துளை ஆகிய இடங்களில் தொடுக. பின் வரும் பாடலை ஓதித் தலைமீது சொரிக:

எல்லாக் கலையும் இடைபிங்கலை நடுச்
சொல்லா நடுநாடி ஊடே தொடர்மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் பாரே

-திருமந்திரம்

உடன் நெற்றியின் இருபக்கங்களிலும் குட்டிக்கொள்க. குட்டிக்கொண்டு 'என் ஆன்மா இறை திருவருளால் தூய்மை ஆகுக', என்று மீண்டும் மலரைத் தலையில் சொரிக. இது உயிர்த்தூய்மை (ஆன்மசுத்தி) எனப்படும்

**1.1.2.** நமது உடல் ஐம்பூதங்களின் மயக்கம். அதாவது கலவை. மண், புனல், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களும் நமது உடலில் உள்ளன. ஒவ்வொன்றையும் அவ்வவற்றின் பகைப் பூதங்களால் ஒடுக்குவதாகப் பாவிக்க.

மலர் எடுத்து மார்பு, நெற்றி, சிரசு ஆகிய இடங்களில் ஒற்றி, 'எனது உடலில் உள்ள ஐம்பூதங்களும் ஒன்றில் ஒன்றாக இறைதிருவருளால் ஒடுங்குக' என்று தலையுச்சிக்குக் கொண்டு போய் பின்புறம் போடுக. இது பருவுருத் தூய்மை (தூலதேக சுத்தி) எனப்படும்.

**1.1.3.** மீண்டும் மலரை எடுத்து புருவ நடுவில் ஒற்றி, ''எனது உடலில் ஐம்பூதங்களுக்கும் நுண்மையாய் உள்ள ஏனைய முப்பத்தோரு நுண்ணுருக் கூறுகளும் ஒன்றில் ஒன்றாக ஒடுங்குக'' என்று ஓதி மலரை தலைமீது சொரிந்து கொள்க. இது நுண்ணுருத் தூய்மை (சூக்கும தேக சுத்தி). எனப்படும்.

**1.1.4.** அடுத்து உடம்பில் கால் கட்டைவிரல் முதல் தலை உச்சிவரை மலர்களால் தடவி, சிவசத்தியால் உண்டான ஞானத்தீயால் தூலவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் படிந்துள்ள மாசுகள் எரிக்கப்பட்டதாகப் பாவித்து,

'ஓம் அண்டம் அடியுறை அழலே எழுக' என்றும்
'ஓம் இறைதிரு கருவியால் உடல்மாசுகள் எரிந்தேகுக'

என்றும் ஓதி மலரை தென்மேற்கு மூலையில் விட்டெறிக.

இது உடல் மாசு எரித்தல் (பூத தோடதகனம்) எனப்படும்.

**1.1.5.** அடுத்து தலை உச்சியில் இருந்து கால்வரை மலர்களால் தடவி,

''ஓம் என் உடலெலாம் விரிய எற்புத்துளை தொறும்
அமுத தாரைகள் ஏற்றி அள்ளூறும் ஆக்கை அமைத்தனன் போற்றி''

என்று ஓதி மலர்களை தம் உடல்மீது சொரிந்து கொள்க. இது அமுதாடல் (அமுதாபிடேகம்) எனப்படும்.

**1.1.6.** அடுத்து மலர்களை எடுத்து இருதயத்தில் வைத்து,

''ஓம் நலம் புகுந்து என்னொடு நாதனை நாட
மனம் புகுந்து என்னுயிர் மன்னுக போற்றி''

என்று ஓதி அமுதாக்கப்பட்ட உடலில் தூய்மை செய்யப்பட்ட ஆன்மாவை நிலை நிறுத்துக. இது உயிர் பதித்தல் (சீவத்தாபனம்).

**1.1.2.** முதல் **1.1.6** வரை உடல் தூய்மை (பூதசுத்தி) எனப்படும்.

**1.2.0.** மூன்று முறை கையைத்தட்டி 'ஓம் இறைதிரு கருவியால் ஏகுக' என்றும் எல்லாத் திசைகளிலும் விரலால் சொடுக்கி 'ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக' என்றும் தீயசத்திகளைத் துரத்துக. பின்னர் சுட்டு விரல் மட்டும் நிமிர்த்தி மேலும் கீழும், பக்கங்களிலும் சுற்றிக் காட்டி, 'ஓம் இறைதிரு வடிவே சூழ்ந்து காக்க' என்று ஓதுக. 'ஓம் சிவாமுதம் பொழிக' என்று தேனு முத்திரை காட்டுக. தேனுமுத்திரை காட்ட இயலாதவர்கள் சுற்றிலும் மலர்களைச் சொரிக.

**1.3.0.** இனி அகவேள்வி செய்க. இடுப்புப் பாகத்தில் முக்கோண வடிவில் ஒரு குண்டம் இருப்பதாகப் பாவித்து, அதில் குண்டலியாகிய நெருப்பை இட்டு வேள்வி ஆற்றியதாகப் பாவித்து, உள்ளங்கையில் மலர்களை எடுத்து மூடி நாபியில் ஒற்றிவைத்துக் கொண்டு 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி தன்மேல் மலர்களைத் தூவிக் கொள்க.

**1.4.0.** இனி, அகத்திலிருந்து புறத்தே வழிபாடு செய்வதற்கு ஏற்ப கரத்தை சிவமாகத் திகழச் செய்தல் வேண்டும்.

'ஓம் சிவாய நம' என்று ஓதி வலது உள்ளங்கையில் இடதுகைக் கட்டை விரலால் சந்தனம், பூ, மஞ்சளரிசி வைத்து தடவுக. மற்ற கைக்கும் இதே சடங்கை ஆற்றுக. பின்னர் இருகரங்களையும் கூப்பி 'ஓம் சிவாய நம' என்று ஓதுக. இது சிவக்கரம் செறிதல் (சிவஹஸ்தம்) எனப்படும்.

**1.5.0.** இனி, பஞ்சபாத்திரத்தில் நீரை விட்டு அதை உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று ஏழுமுறை ஓதுக. அதில் அட்சதை, சந்தனம், அருகம்புல் நுனிகள் ஆகியவற்றை இட்டு மீண்டும் ஏழு முறை ஓம் சிவாய நம' என்று ஓதுக. இந்த அருள் நீரை எடுத்து எல்லாப் பூசைப் பொருட்களிலும் தன் மேலும் ''ஓம் இறை திருகருவியால் எல்லாக் குற்றங்களும் கடிதேகுக'' என்று ஓதித் தெளிக்க. இது பொருள் தூய்மை (திரவிய சுத்தி) எனப்படும்.

**1.6.0.** இனி, ஓம் சிவய நம; ஓம் சிவாய நம; ஓம் சிவாஅய நம'' என மூன்று வகையாக மூலமந்திரத்தை ஓதுக. இது மந்திரத் தூய்மை (மந்திர சுத்தி). எனப்படும்.

**1.1.0.** முதல் **1.6.0.** வரை பூசைக்கு முன்னாக செய்ய வேண்டிய ஐவகைத் தூய்மைகளான ஆன்மத்தூய்மை, உடல் தூய்மை, இடத்தூய்மை, பொருள் தூய்மை, மந்திரத் தூய்மை ஆகியவை நிறைவேறின.

**2.1.0** 'ஓம்' என்று ஏற்றி இறக்கி மூன்று முறை உச்சரிக்க. பின்னர்,

"எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வலான்றனையே ஏத்து"

என்று இரண்டு முறை ஓதுக. பின்னர், தலையில் குட்டிக் கொண்டு,

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை"

என்று ஓதுக.

'ஓம் பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி' என்று ஓதி பஞ்ச பாத்திரத்தில் இருந்து நீரை எடுத்துக் கையலம்பி பூமியில் விடுக.

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் மனவுருவை ஒப்படைக்கின்றேன்"

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் அறிவுருவை ஒப்படைக்கின்றேன்"

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் சிவவுருவை ஒப்படைக்கின்றேன்"

என்று மூன்று முறை உள்ளங்கையில் பஞ்சபாத்திரத்திலிருந்து உருத்திரிணி எனப்படும் தினை நீர்க் கரண்டியால் நீரை விட்டுப் பருகி ஓதவும். இதனால் இறைவனுக்கு உடல், பொருள் ஆவி மூன்றும் ஒப்படைக்கப்படுவது காண்க. இப்படி ஒப்படைப்பில்லாத பூசை வழிபடும் இறைவனைச் சென்றடையாது.

இனி, திருநீற்றை எடுத்து இடது உள்ளங் கையில் வைத்து வலது உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி நீர் விட்டுக் குழைத்து நெற்றி, தோளிரண்டு, கைமூட்டிரண்டு, மணிக்கட்டிரண்டு, மார்பு, நாபி, கால் மூட்டிரண்டு ஆகிய இடங்களில் அணிந்து கொள்க.

"ஓம் சாற்றிய மூல மந்திரத் தால்உரு
நீற்றுக் கோடியில் நிமிர்த்தினன் போற்றி"

என்று ஓதி கை கூப்புக.

**2.2.0.** இனி, சங்கல்பம் எனப்படும் திண்ணெண்ணம் பூணுதல் வேண்டும். அதற்கு உரிய சொற்றொடர்கள் வருமாறு :

"ஓம் உம்பரும் போற்றும் ஒண்டமிழ் மறையால்
அம்பிகை பூசை ஆற்றுவன் போற்றி"
காலமும் இடமும் கருதிச் செய்தேன்
ஞால நலமெலாம் நல்குக போற்றி"

**2.3.0.** அடுத்து மணி வழிபாடு செய்க.

"ஓம் என்னுள் ஒலிக்கும் பதின்ஒலி அவற்றை
மன்னி ஒலிக்கும் மணியே போற்றி"

என்று ஓதி மணியின் மீது உள்ள நந்தியின் மீது மலரிடுக.

**2.4.0.** இனி, உயிர்வளி நிறுத்தல் (பிராணாயாமம்) என்பதைச் செய்க.

அதாவது வலதுகை நடு விரலைக் கட்டை

விரலைத் தொடும்படி மடித்து கொள்க. கட்டை விரலால் மூக்கின் வலப்பாகத்தை அழுத்தி மூடுக. பின்னர் இடப்பாக தொளை வழியாக மூச்சினை உள்ளே இழுத்து மோதிர விரலால் இடப்பாகத் தொளையை மூடி உடனே கட்டைவிரலை எடுத்து வலது தொளை வழியாக வேகமாக விடுக. விடும்போது, ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக என்று ஓதுக. இதே போன்று வலப்பாகத்தில் மூச்சை இழுத்து இடப்பாக வழியாக விடுக. விடும் போது மேற்படி மந்திரத்தை ஓதுக. இதனால் மூச்சு தூய்மை ஆகிறது.

பின்னர் முன்போல் வலது பாக மூக்கினைக் கட்டை விரலால் அழுத்தி இடத்தொளை வழியாக முடிந்த மட்டும் மூச்சை இழுத்து உள்ளே மூச்சை நிறுத்துக. அந்நிலையில் பதினொரு முறை 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் ஓதுக. உள்ளே நிறுத்தப்பட்ட அந்த மூச்சு குண்டலி ஆற்றலை தூண்டி எழுப்பியதாக ஆகும்.

பின்னர் மூச்சினை வலப்பாக நாசி வழியாக விடுக. இதேபோன்று வலப்பாக நாசி வழியாக மூச்சை உள்ளே இழுத்து நிறுத்தி இடப்பாக நாசி வழியாக விடுக. நிறுத்தும்போது 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் பதினொருமுறை ஓதுக. இதுவே உயிர்வளி நிறுத்தல் ஆகும்.

2.5.0. அடுத்து மெய்யொன்றல் (சகளீகரணம்) என்பதைக் செய்க. கையில் மலர்களை எடுத்து தலைமீது வைத்து

"ஓம் முடிமுதல் அடிவரை என்னுடல் மேவி
கடிதில் கலந்தருள் அம்பிகை போற்றி"

என்று ஓதி உடலெலாம் மலர்தூவிக் கொள்க.

முதல் 7 நாட்களில்

ஓம் ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கிறோம்.

1. பலப்பிரதமனியே எழுந்தருள்க
2. பலவிகரணியே எழுந்தருள்க
3. கலவிகரணியே எழுந்தருள்க
4. காளியே எழுந்தருள்க
5. ரௌத்திரியே எழுந்தருள்க
6. சேட்டையே எழுந்தருள்க
7. வாமையே எழுந்தருள்க

**<u>மூவுபசாரங்கள்:</u>**

எல்லாம் வல்ல சத்திகளின் திருவடிகளை விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல சத்திகளின் திருவாய் விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல சத்திகளின் திருமுடி விளக்கி வணங்குகிறோம்.

**<u>தூபம்:</u>**

3.1.0. ''ஓம் சால உயர்ந்த சாம்பிராணி

ஏலப்புகை சூழ்ந்து ஏத்தினன் போற்றி என்று ஓதி சாம்பிராணி புகை, ஊதுவத்தி புகை ஆகிய நறும்புகை காட்டுக.

தீபம்:

3.2.0. ''ஓம் உய்யும் வகைதந் தருளிட ஒருதிரி

நெய்யிடு தீபம் நேர்ந்தனன் போற்றி'' என்று ஒற்றைச் சுடர் காட்டுக.

அமுதூட்டல்

3.3.0. ''ஓம் அப்பம் மோதகம் அமுதுபல வகைகள்

இப்பொழு திங்கே படைத்தனன் போற்றி

வாழை மாபலா மணிதிகழ் மாதுளை

ஏழை அளித்தேன் ஏற்க போற்றி''

என்று ஓதி அமுது படைக்க.

**<u>அர்ச்சனை:</u>**

ஒவ்வொரு பாடல் முடிவிலும்

"உலைவறும் ஒருபரை போற்றி போற்றியே
உமை சிவை அம்பிகை போற்றி போற்றியே"

என்று ஓதி மணி அடிக்கவும்

1 மா மாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓ மாயை உள் ஒளி ஓர் ஆறு கோடியில்
தாம் ஆன மந்திரம் சத்தி தன் மூர்த்திகள்
ஆம் ஆய அலவாம் திரிபுரை ஆங்கே.

2 திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி ஆம் பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வரு பலவாய் நிற்கும் மாமாது தானே.

3 தானா அமைந்த அம் முப்புரம் தன் இடைத்
தான் ஆன மூ உரு ஓர் உருத் தன்மையள்
தான் ஆன பொன் செம்மை வெண் நிறத்தாள் கல்வி

தான் ஆன போகமும் முத்தியும் நல்குமே.

4 நல்கும் திரிபுரை நாத நாதாந்தங்கள்
பல்கும் பரவிந்து பார் அண்டம் ஆனவை
நல்கும் பரை அபிராமி அகோசரி
புல்கும் அருளும் அப்போதம் தந்து ஆளுமே.

5 தாள் அணி நூபுரம் செம்பட்டுத் தான் உடை
வார் அணி கொங்கை மலர்க் கன்னல் வாளி வில்
ஏர் அணி அங்குச பாசம் எழில் முடி
கார் அணி மா மணிக் குண்டலக் காதிக்கே.

6 குண்டலக் காதி கொலை வில் புருவத்தள்
கொண்ட அரத்த நிறம் மன்னும் கோலத்தள்
கண்டிகை ஆரம் கதிர்முடி மா மதிச்
சண்டிகை நால் திசை தாங்கி நின்றாளே.

7 நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றல் இல் மோகினி மா திருக் குஞ்சிகை
நன்று அறி கண்டிகை நால்கால் கரீடணி
துன்றிய நல் சுத்த தாமரைச் சுத்தையே.

8 சுத்த அம் பாரத் தனத்தி சுகோதயள்
வத்துவ மாயாள் உமா சத்தி மா பரை
அத்தகை யாவும் அணோரணி தானும் ஆய்
வைத் தவக் கோலம் மதி அவள் ஆகுமே.

9 அவளை அறியா அமரரும் இல்லை
அவள் அன்றிச் செய்யும் அரும் தவம் இல்லை
அவள் அன்றி ஐவரால் ஆவது ஒன்று இல்லை
அவள் அன்றி ஊர் புகுமாறு அறியேனே.

10 அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவார் அரு உருவாம் அவள் என்பர்
அறிவார் கருமம் அவள் இச்சை என்பர்
அறிவார் பரனும் அவள் இடத்தானே.

11 தான் எங்கு உளன் அங்கு உளள் தையல் மா தேவி
ஊன் எங்கு உள அங்கு உளன் உயிர்க் காவலன்
வான் எங்கு உள அங்கு உளே வந்து அப்பால் ஆம்
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே.

12 பரா சத்தி மா சத்தி பல வகையாலும்
தரா சத்தியாய் நின்ற தன்மை உணராய்
உரா சத்தி ஊழிகள் தோறும் உடனே
புரா சத்தி புண்ணியம் ஆகிய போகமே.

13 போகம் செய் சத்தி புரி குழலா ளொடும்
பாகம் செய்து ஆங்கே பராசத்தியாய் நிற்கும்
ஆகம் செய்து ஆங்கே அடியவர் நாள் தொறும்
பாகம் செய் ஞானம் படர்கின்ற கொம்பே.

14 கொம்பு அனையாளை குவிமுலை மங்கையை
வம்பு அவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம் பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பி என் உள்ளே நயந்து வைத்தேனே.

15 வைத்த பொருளும் மரு உயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பரா பரைச்
சித்தக் கரணச் செயல்களும் செய்திடும்
சத்தியும் வித்தைத் தலை அவள் ஆமே.

16 தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவம் செயும் தூய்நெறித் தோகை
கலை பல வென்றிடும் கன்னி என் உள்ளம்
நிலை பெற இங்கே நிறைந்து நின்றாளே.

17 நின்றவள் நேர் இழை நீள் கலை யோடு உற
என்றன் அகம் படிந்து ஏழ் உலகும் தொழ
மன்றது ஒன்றி மனோன் மணி மங்கலி
ஒன்று எனோடு ஒன்றி நின்று ஒத்து அடைந்தாளே.

18 ஒத்து அடங்கும் கமலத்து இடை ஆயிழை
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்து அடைகின்ற மனோன்மணி மங்கலி
சித்து அடைக்கும் வழி தேர்ந்து உணரார்களே.

19 உணர்ந்து உடனே நிற்கும் உள் ஒளி ஆகி
மணம் கமழ் பூங் குழலாள் மங்கையும் தானும்
புணர்ந்து உடனே நிற்கும் போதரும் காலைக்
கணிந்து எழுவார்க்குக் கதி அளிப்பாளே.

20 அளி ஒத்த பெண் பிள்ளை ஆனந்த சுந்தரி
புளி உறு புன் பழம் போல் உள்ளே நோக்கித்
தெளி உறு வித்துச் சிவகதி காட்டி
ஒளி உற வைத்து என்னை உய்ய உண்டாளே.

21 உண்டு இல்லை என்றது உருச் செய்து நின்றது
வண்டில்லை மன்றின் உள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டலம் மூன்று உற மன்னி நின்றாளே.

22 நின்றாள் அவன் தன் உடலும் உயிருமாய்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுள் புகுந்து உணர்வு ஆகியே
நின்றாள் பரம் சுடர் ஏடு அம் கையாளே.

23 ஏடு அம் கை நங்கை இறை எங்கள் முக் கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண் தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னி வாய்த் தோத்திரம் சொல்லுமே.

24 தோத்திரம் செய்து தொழுது துணை அடி
வாய்த்திட ஏத்திவழிபடுமாறு இரும்பு
ஆர்த்திடும் அங்குச பாசம் பசும் கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை ஆகும் ஆம் ஆதிக்கே.

25 ஆதி விதமிகுத்து அண்ட அந்த மால் தங்கை
நீதி மலரின் மேல் நேர் இழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பல்கால் பயில்விரேல்
சோதி மிகுத்து முக்காலமும் தோன்றுமே.

26 மேதாதி ஈர் எட்டும் ஆகிய மெல் இயல்
வேத ஆதி நூலின் விளங்கும் பரா பரை
ஆதாரம் ஆகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்ல அருளாலே.

27 அருள் பெற்றவர் சொல்ல வாரீர் மனிதர்
பொருள் பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருள் உற்ற சிந்தையை மாற்றி அருமைப்
பொருள் உற்ற சேவடி போற்றுவன் யானே.

28 ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈனவர் ஆகம் இடிக்கும் முசலத்தோடு
ஏனை உழுபடை ஏந்திய வெண் நகை
ஊனம் அற உணர்ந்தார் உளத்து ஓங்குமே.

29 ஓம் காரி என்பாள் அவள் ஒரு பெண் பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத்து உள்ளே இனிது இருந்தாளே.

30 தானே தலைவி என நின்ற தற்பரை
தானே உயிர் வித்துத் தந்த பதினாலும்
வானோர் தலமும் மனமும் நல் புத்தியும்
தானே சிவகதி தன்மையும் ஆமே.

இனி வரும் அட்ட புட்ப போற்றியை ஓதி மலரிடுக.

ஓம் கொல்லா நோன்பருளும் கூத்தா போற்றி
ஓம் ஐந்தடக்கும் ஆற்றல் அருள்வோய் போற்றி
ஓம் பொறையுடைமை கைக்கொளச்செய் புலமையோய் போற்றி
ஓம் அருள்வழியே நடப்பிக்கும் அன்பே போற்றி
ஓம் அறிவுருவாய் ஆக்குவிக்கும் அண்ணால் போற்றி
ஓம் வாய்மை நெறி நிற்பிக்கும் வள்ளால் போற்றி
ஓம் தவநெறியே சார்விக்கும் தக்கோய் போற்றி
ஓம் அன்புநெறி ஒழுகச்செய் இன்பே போற்றி

**3.9.0.** இனி பெரும்பேரொளி வழிபாடு ஆற்றுக. ஐங்கலைக் கற்பூர ஒளி அல்லது பெரிய கட்டி கற்பூரத்தை ஏற்றி அம்பிகைக்குக் காட்டி,

ஓம் பெருங்கற்பூர தீபம் எடுத்தேன்

திருமங் களம்தந் தருளுக போற்றி

என்று ஓதுக. விபூதி எடுத்து கற்பூர ஒளியைச் சுற்றி காட்டி அம்பிகை மேல் தூவி சிறிதளவு விபூதியை உச்சிமேல் காட்டி விபூதி சம்புடத்தில் சேர்க்க. அது ஒளி நீறு எனப்படும்.

8ஆம் நாள் சரசுவதி பூசை கூடுதலாக சர்வ பூததமனியை எழுந்தருளச் செய்ய வேண்டும்.

ஓம் ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றோம் சர்வபூததமனியே எழுந்தருள்க.

மா மாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓ மாயை உள் ஒளி ஓர் ஆறு கோடியில்
தாம் ஆன மந்திரம் சத்தி தன் மூர்த்திகள்
ஆம் ஆய அலவாம் திரிபுரை ஆங்கே.

மூவுபசாரம், தூப, தீபம்... ஏற்கெனவே உரைத்தபடி ஆற்றுக.

போற்றி அர்ச்சனையில் சரசுவதி வழிபாட்டிற்குரிய சகலகலாவல்லிமாலை ஓதி ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் மணியொலித்து மலர் சொரிக.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்க என் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ சக மேழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே 2

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே 3

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய் வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே 4

பஞ்சப் பிதந்தரும் செய்ய பொற் பாதபங் கேருகம்என்
நெஞ்சத் தடத்தல ராததென்னே நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே 5

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே 6

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே 7

சொல்விற் பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல
நல் வித்தை யுந்தந் தடிமை கொள்வாய் நளினாசனம் சேர்
செல்விக் கரிதென் றொரு காலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே 8

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவில் பணியச் செய் வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே 10

## 9ஆம் நாள் மனோன்மணி பூசை/திருமகள் வழிபாடு

இங்கே கூடுதலாக மனோன்மணியை எழுந்தருளச் செய்க

**ஆதி அனாதியும் ஆய பராசத்தி**
**பாதி பராபரை மேலுறை பைந்தொடி**
**மாது சமாதி மனோன்மனி மங்கலி**
**ஓதும் என் உள்ளத் துடன் முகிழ்த்தாளே!**

மூவுபசாரம், தூப, தீபம்... ஏற்கெனவே உரைத்தபடி ஆற்றுக.

திருமகளுக்கு 108 போற்றி அர்ச்சனை புரிக.

ஒவ்வொரு போற்றி முடிவிலும் எல்லோரும் "போற்றி ஓம்" என்று சொல்ல வேண்டும்.

ஓம் திருமா மகளே செல்வி போற்றி
ஓம் திருமால் உரத்தில் திகழ்வோய் போற்றி
ஓம் திருப்பாற் கடல் வரு தேவே போற்றி
ஓம் இரு நில மக்கள் இறைவி போற்றி
ஓம் அருளே உருவாய் அமைந்தோய் போற்றி
ஓம் மருநிறை மலரில் வாழ்வோய் போற்றி
ஓம் குருவென ஞானம் கொடுப்போய் போற்றி
ஓம் இருளொழித் தின்பம் ஈவோய் போற்றி
ஓம் அருள் பொழிந்தெம்மை ஆள்வோய் போற்றி
ஓம் தெருள் தரு அறிவின் திறனே போற்றி
ஓம் ஆறுதல் எமக்கிங் களிப்போய் போற்றி
ஓம் சீறுதல் கொள்ளாத் திருவே போற்றி
ஓம் ஊக்கம தளிக்கும் உயிரே போற்றி
ஓம் ஆக்கம் ஈயும் அன்னாய் போற்றி
ஓம் இறைவி வலப்பால் இருப்போய் போற்றி
ஓம் பொறையுடன் உயிரைப்புணர்ப்போய் போற்றி
ஓம் அன்பினைக் காட்டும் ஆயே போற்றி
ஓம் வன்பினை என்றும் வழங்காய் போற்றி
ஓம் பனிமதி உடன்வரு பாவாய் போற்றி
ஓம் கனியினும் இனிய கமலை போற்றி
ஓம் நிமலனை என்றும் நீங்காய் போற்றி
ஓம் கமலம துதித்த கன்னி போற்றி
ஓம் குற்றம் ஓராக் குன்றே போற்றி
ஓம் செற்றம் கொள்ளாச் சிறப்போய் போற்றி
ஓம் அன்னையென அணைப்போய் போற்றி
ஓம் தன்னிகர் தாளைத் தருவோய் போற்றி
ஓம் மாயனாம் மலர்க்கு மணமே போற்றி
ஓம் நேயமுற் றவனை நீங்காய் போற்றி
ஓம் இறைவியாய் எங்கணும் இருப்போய் போற்றி
ஓம் மறைமொழி வழங்கும் மாண்பே போற்றி
ஓம் மாலினைக் கதியாய் மதித்தோய் போற்றி
ஓம் சீலஞ் செறிந்த சீதா போற்றி
ஓம் அன்பருக் கருள்புரி அருட்கடல் போற்றி
ஓம் இன்பம் அருளும் என் தாய் போற்றி
ஓம் அச்சுதன் காதல் ஆர்வோய் போற்றி
ஓம் எச்சுவை தனையும் ஈவோய் போற்றி
ஓம் பூதலத்தன்று போந்தாய் போற்றி
ஓம் தீதெலாம் தீர்க்கும் திருவே போற்றி
ஓம் இலங்கையிற் சிறை இருந்தோய் போற்றி

ஓம் நிலங்கொள் நீர்மை நிறைவே போற்றி
ஓம் திரிசடை நட்பைத் தேர்ந்தோய் போற்றி
ஓம் பரிவுடை யவர்பால் பரிவினாய் போற்றி
ஓம் குரங்கினைக் கண்டு குளிர்ந்தோய் போற்றி
ஓம் வரங்கள் அவர்க்கு வழங்கினை போற்றி
ஓம் அரக்கியர்க்கு அபயம் அளித்தோய் போற்றி
ஓம் இரக்கமாம் ஒன்றில் இருப்போய் போற்றி
ஓம் இராவணர்க் கிதமே இசைத்தோய் போற்றி
ஓம் இராமருக் குரிய இன்பே போற்றி
ஓம் கணவனை அடைந்து களித்தோய் போற்றி
ஓம் குணநிதி ஆகக் குலவினாய் போற்றி
ஓம் அரசியாய் அயோத்திக் கானாய் போற்றி
ஓம் முரசொலி அந்நகர் முதல்வி போற்றி
ஓம் உருக்கு மணியாய் உதித்தோய் போற்றி
ஓம் செருக் கொழித்து ஒளிரும் செய்யாய் போற்றி
ஓம் சிசுபாலன் தனைச் செற்றோய் போற்றி
ஓம் பசுநிறை மேய்ப்போன் பாரியே போற்றி
ஓம் பத்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
ஓம் எத்திக் குந்துதி ஏய்ந்தாய் போற்றி
ஓம் மாலின் சினத்தை மறைப்போய் போற்றி
ஓம் மேலருள் புரிய விளம்புவோய் போற்றி
ஓம் மாதவனோடு வாழ்வோய் போற்றி
ஓம் ஆதவன் ஒளி போன்றமைந்தோய் போற்றி
ஓம் சேதனன் பொருட்டுச் சேர்வோய் போற்றி
ஓம் பாதகம் தீர்க்கப் பகர்வோய் போற்றி
ஓம் நாதனுக் கருஞ்சொல் நவில்வோய் போற்றி
ஓம் ஓதமில் பொன்னென இயங்குவோய் போற்றி
ஓம் தக்கன ஓதும் தாயே போற்றி
ஓம் மக்களின் இன்னலை மாய்ப்போய் போற்றி
ஓம் பக்கலின் இருக்கும் பணிமொழி போற்றி
ஓம் துக்கம் ஒழியச் சொல்வோய் போற்றி
ஓம் அஞ்சலென் றருளும் அன்பே போற்றி
ஓம் தஞ்சமென் றவரைச் சார்வோய் போற்றி
ஓம் பங்கயத் துறையும் பாவாய் போற்றி
ஓம் செங்கண்ணன் மார்பில் திகழ்வோய் போற்றி
ஓம் கண்ணருள் கொண்டுயிர் காப்போய் போற்றி
ஓம் எண்ணரு நலந்தரும் எம்மனை போற்றி
ஓம் நான்கிரு நாமம் நயந்தோய் போற்றி
ஓம் வான்மிகு பெருமை வாய்ந்தோய் போற்றி
ஓம் ஆன்ற ஆதித் திருவே போற்றி
ஓம் தோன்றும் கதிர்மணித் திருவே போற்றி
ஓம் வீரம் விளைக்கும் திருவே போற்றி
ஓம் ஆரம்சூழ் ஆனைத் திருவே போற்றி
ஓம் சான்ற மக்கட் திருவே போற்றி
ஓம் ஊன்றிடு வெற்றித் திருவே போற்றி
ஓம் கேழில் திருவாம் கலைத்திரு போற்றி
ஓம் ஊழில் வருநிதித் திருவே போற்றி
ஓம் பண்பினை வளர்க்கும் பயனே போற்றி
ஓம் நண்பாய் அறிஞர்பால் நண்ணுவோய் போற்றி
ஓம் எண்ணினுள் எண்ணே இசையே போற்றி
ஓம் கண்ணினுள் மணியே கருத்தே போற்றி
ஓம் அறிவினுள் அறிவாம் அன்னே போற்றி
ஓம் நெறியினுள் நெறியாம் நிலையே போற்றி
ஓம் உணர்வினுள் உணர்வாம் உருவே போற்றி
ஓம் குணத்தினுள் குணமாம் குன்றே போற்றி
ஓம் கருத்தினுள் கருத்தாய்க் கலந்தாய் போற்றி
ஓம் அருத்தியை ஆக்கும் அறிவே போற்றி
ஓம் தமிழினுக்கு இனிமை தருவோய் போற்றி
ஓம் அமிழ்தினும் இனிய ஆயே போற்றி
ஓம் ஆழ்வார் பாடலில் ஆழ்வாய் போற்றி
ஓம் சூழ்வார் துன்பம் துடைப்பாய் போற்றி
ஓம் தொண்டரின் தொண்டுளம் தேற்றுவாய் போற்றி
ஓம் அண்டர் போற்றும் அமலை போற்றி
ஓம் நாரணர்க்கினிய நல்லோய் போற்றி
ஓம் மாரனைப் பெற்ற மாதே போற்றி
ஓம் உலகிடைப் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
ஓம் நலமெலாம் உயிர்க்கு நல்குக போற்றி
ஓம் எங்களுக்கின்னருள் ஈந்தருள் போற்றி
ஓம் மங்கலத் திருநின் மலரடி போற்றியே!

# தெய்வமுரசு

## ஆன்மீக மாத இதழ்

- தமிழ் உணர்வு பொங்க வரும் தனித்தெய்வ மாத இதழ்!
- ஆன்மீகமும், அருந்தமிழும் கலந்த அற்புதமான மாத இதழ்!
- தமிழின் மாண்புகளும் திருமுறை பெருமைகளும் இணைந்து உருக்கி வார்த்த வேலாக புறப்படுகிறது இந்த மாத இதழ்!
- சுற்றி நில்லாதே போ இருளே! துள்ளி வருகுது வேல்!
- சிக்கல் நிறைந்த கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில்களைத் தாங்கி சுந்தரத்தமிழில் சுடச்சுட வரும் கேள்வி – பதில் பகுதி!
- தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளும், சுவையான பேட்டிகளும் நிறைந்த இதழ்!
- உண்மை பக்தி நெறியை உலகில் நிலைநாட்ட வரும் ஒரே இதழ்!
- நாடறிந்த திருமந்திரத் தமிழ்மாமணி, செந்தமிழ் வேள்விச்சதுரர் **மு.பெ.சத்தியவேல் முருகனார்** ஆசிரியராக இருந்து அரிய தலையங்கங்களை எழுதுகிறார்.
- நடைமுறை காலத்தில் விடைமுறை கிடைக்காத அவ்வப்போதைய ஆன்மீக பிரச்சனைகளை அலசி ஆராய்கின்ற ஒரே சிறப்பு இதழ்!

| | 1 ஆண்டு | 5 ஆண்டு | புரவலர் | ஆர்வலர் |
|---|---|---|---|---|
| சந்தா | ரூ.100.00 | ரூ.500.00 | ரூ.1000.00 | ரூ.10,000.00 |

**விளம்பரம்:**

பின் அட்டை வெளிப்பக்கம் - ரூ. 3000.

மேலட்டை உள்பக்கம் - ரூ. 2500. பின் அட்டை உள்பக்கம் - ரூ. 2000.

முழுப்பக்கம் உள்ளே - ரூ. 1000. அரைப்பக்கம் உள்ளே - ரூ. 600.

**சந்தா மற்றும் விளம்பர கட்டணங்களை உங்கள் அருகில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி(SBI) கிளைகளில் செலுத்தலாம்.**

**DHEIVA MURASU SBI A/C NO:10477444814**

பணம் செலுத்திய இரசீதினைத் தங்கள் முழு முகவரியுடன் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**தெய்வமுரசு**
9/1, மாஞ்சோலை முதல் தெரு,
கலைமகள் நகர், ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை – 600 032

# தெய்வமுரசு

ஆன்மீக மாத இதழ்

## சந்தா படிவம்

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

____________________

____________________

தொலைபேசி : ____________________

கைபேசி : ____________________

மின்னஞ்சல் : ____________________

| ஆண்டு : | ஒன்று | ஐந்து | பத்து | ஆயுள்(ஆர்வலர்) |
|---|---|---|---|---|
| இதழ் சந்தா கட்டணம் : | ☐ ரூ.100 | ☐ ரூ.500 | ☐ ரூ.1000 | ☐ ரூ.10,000 |

### பணம் செலுத்தும் முறை:

☞ **காசோலை** :– DHEIVA MURASU என்ற பெயரில்.

☞ **வங்கி வழி** :– உங்கள் அருகில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி (SBI) கிளைகளில் DHEIVA MURASU என்ற பெயருக்கு A/C.No. 10477444814 என்ற எண்ணில் சந்தா செலுத்தி, இரசீதினையும் இப்படிவத்தையும் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

☞ **பணவிடைத் தாள்** :– பணவிடைத்தாள்(M.O) படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உங்கள் முழு முகவரியை மறக்காமல் எழுதி, சந்தாவை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**தெய்வமுரசு**

9/1, மாஞ்சோலை முதல் தெரு,

கலைமகள் நகர்,ஈக்காட்டுத்தாங்கல்

சென்னை – 600 032

Visit www.dheivathamizh.org